விலக்கு தந்து, எடுக்கலாம் என்ற உத்தரவை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால் இதுபோன்ற குறைகள் இருக்காது. ஆகவே, குறைகளைச் சுட்டிக்காட்டுவார்களேயானால் அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 395: செல்வி கோ. மல்லிகா. மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

395— மீனவர்களுக்கு இலவச வீடுகள்.

*1223—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, குமாரப்பேட்டை, புதுக்குப்பம் ஆகிய ஊர்களில் உள்ள மீனவ சமுதாய மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): நம்மைக் காத்து வழி நடத்தும் தெய்வமாக இருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதற்கு இணங்க வேளிங்கராயன்பட்டி மற்றும் புதுக்குப்பம் கிராமங்களில் மீனவர்கள் துயர் துடைக்க 109 வீடுகள் கட்ட உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் மிகவும் பின்தங்கிய புவனகிரி தொகுதியைத் தொழில் வளம் மிக்க பகுதியாக ஆக்க பி. அண்டு சி. ஆலையின் புராசசிங் யூனிட்டை புவனகிரியில் அமைக்க ஆணை வழங்கிய என் அன்புத் தெய்வமே, நீங்கள் வாழ்க பல்லாண்டு, வளர்க உன் தொண்டு எனக் கூறி, என் அன்பு நன்றியினை அவரது பொற் பாதங்களில் காணிக்கையாக்கி, மீனவ மக்களின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, புதுக்குப்பம், குமாரப்பேட்டை மற்றும் வேளிங்கராயன்பேட்டை போன்ற பகுதிகளிலுள்ள மீனவர்கள் சிலருக்கு வீடுகள் ஒதுக்கியுள்ளதற்கும் நன்றியினைத் தெரிவித்து, வீடு கிடைக்காத மீனவர்களுக்கும் வீடுகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.